**சித்திரவதைகளை தடுப்பதற்கான ஐக்கிய நாடுகளின் குழு அதனுடைய இலங்கைக்கான விஜயத்தை நிறைவுசெய்துகொண்டது.**

ஜெனிவா/கொழும்பு, (12 ஏப்பிரல் 2019) - ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைகளை தடுப்பதற்கான உபகுழு 02.04.2019ஆம் திகதி முதல் 12.04.2019ஆம் திகதி வரை மேற்கொண்டிருந்த இலங்கைக்கான அதன் முதலாவது விஜயத்தை நிறைவுசெய்து கொண்டது. இவ் விஜயத்தின் போது சித்திரவதை மற்றும் மோசமாக நடாத்தபடுதலுக்கு எதிராக பாதுகாப்பு பெறுவதற்கு மாறாக சுகந்திரமும் பாதுகாப்பும் மறுக்கப்படுகின்ற நிலை பற்றி இது பரீசீலித்தது.

“இந்த விஜயத்தின் போது எங்களுக்கு சிறந்த ஒத்துழைப்பு கிடைத்தது. தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு செல்வதற்கும், குறித்த சகல தகவல்களையும் பெறுவதற்கும், மற்றும் இரகசியமான முறையில் நேர் காணல்களை மேற்கொள்வதற்கும் எமக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. சித்திரவதைக்கு எதிரான பிரகடனத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள அம்சங்களை எதிர்காலத்தில் முன்னேற்றகரமாக மேற்கொள்ளும் வகையில் இலங்கையில் தேசிய தடுப்பு பொறிமுறை ஒன்று உருவாகுவதை நாம் சாதகமாக நோக்குகிறோம்” என நான்கு பேர் கொண்ட குழுவை வழிநடாத்திய விக்டர் சகாரியா குறிப்பிட்டார்.

“இரகசியதன்மை பேணப்படுதல், பக்கச்சார்பின்மை, குறிப்பாக தேர்வு செய்யாதிருத்தல், சகலரையும்-அனைத்தையும் உள்வாங்கும் நிலை, மற்றும் வெளிப்படையான திறந்த நோக்கு, ஆகியவற்றின் கோட்பாடுகள், கொள்கைகளின் கீழ் எங்கள் கடமை பணிகள் வழிகாட்டப்பட்டுள்ளன” என சகாரியா வலியுறுத்தினார்.

இந்த குழு, காவல் நிலையங்கள், சிறைச்சாலைகள், விளக்கமறியல்கள், இராணுவ முகாம்கள், புனர்வாழ்வு அளிக்கும் நிலையங்கள், உளநலம் பேணும் நிறுவனங்கள், சிறுவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நிலையம் ஆகியவற்றுக்கு விஜயம் மேற்கொண்டு அரச பிரதநிதிகளோடும், இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோருடனும் சந்திப்புகளை நடாத்தியது. 2017ஆம் ஆண்டில் இலங்கை, கையொப்பம் இட்டு ஏற்றுக்கொண்ட மேற்படி பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கங்களின் பிரகாரம், எந்த ஒரு அதிகார சபையோ, உத்தியோகத்தரோ, எந்த ஒரு நபருக்கோ அல்லது எந்த ஒரு நிறுவனத்துக்கோ இந்த உபகுழுவோடு அல்லது அதன் குழுக்களோடு தொடர்பாடல்களை மேற்கொண்டு, உண்மையான அல்லது தவறான தகவலையோ வழங்கியமைக்காக தண்டனை வழங்குவதற்கான கட்டளையிடவோ தண்டனைக்கு ஏற்ற பிரயோகங்களை மேற்கொள்ளவோ, அனுமதிக்கவோ அல்லது ஏற்றுக்கொள்வதையோ செய்தல் முடியாது. அத்தகைய நபர் அல்லது நிறுவனம் பற்றி முன்கூட்டியே தீர்மானங்களை எந்த வகையிலும் மேற்கொள்ளலாகாது, எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த உபகுழு தன்னுடைய கடமைகளை ஐக்கிய நாடுகளின் சாசனம் மற்றும் அதன் நோக்கங்கள், கோட்பாடுகள், கொள்கைகள் ஆகியவற்றால் வழிநடாத்தப்படுகின்ற அம்சங்களுக்கு அமைவான சட்டகத்துக்குள் நிறைவேற்றுகின்றது. அதே போல் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ள மக்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் கூறப்பட்டுள்ள விழும்பியங்களையும் அது கவனத்திற்கொள்கின்றது.

இந்த உப குழுவின் அடுத்தக்கட்ட செயற்பாடாக அமைவது, இலங்கை அரசிற்கு இந்த குழுவினுடைய இரகசிய அறிக்கையை சமர்ப்பித்தலாகும். இந்த அறிக்கையானது மேற்படி குழுவின் விஜயத்தின் போது, அது மேற்கொண்ட அவதானிப்புகள், சிபாரிசுகள் முதலியவற்றை உள்ளடக்கி இருக்கும். சித்திரவதைகளை தடுப்பதற்கான உபகுழுவானது அரச தரப்பினரை தங்கள் அறிக்கைகளை பகிரங்கப்படுத்த ஊக்கப்படுத்தும்.

மேற்படி குழு, இக் குழுவின் தலைவரான, விக்டர் சகாரியா (மோல்டோவா குடியரசு), சத்தியபூஷன் குட் டொமா (மொரிஷியஸ்), பெற்றோஸ் மிச்சாலிடெஸ் (சைபிரஸ்) மற்றும் ஜுன் லோபேஸ் (பிலிப்பைன்ஸ்) ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

**(முடிவுறுகிறது)**

ஊடக விசாரனைகளுக்கு media@ohchr.org எனும், ஐக்கிய நாடுகளின், மனித உரிமைகள் தொடர்பான ஊடக அலுவலகத்தை தயவுடன் தொடர்புகொள்ளவும்.

**பிண்ணனி**

சித்திரவதைகளை தடுப்பதற்கான உபகுழுவானது, அரச தரப்புகள் சித்திரவதை தடுப்பதற்கு எதிரான விருப்பத்தெரிவு ஒழுங்கு விதிகளுக்கு அமைய மேற்படி பிரகடனத்தின் உள்ளடக்கங்களை எவ்வாறு அமுல்படுத்துகிறது என மேற்பார்வை செய்கிறது. இது வரையிலும் இந்த பிரகடனம் 89 நாடுகளால் கையொப்பம் இட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி உப குழு 25 உறுப்பினர்களை, கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இவர்கள் உலகலாவியரீதியில் தெரிவு செய்யப்பட்ட, தனிப்பட்ட முறையில் மனித உரிமைகள் தொடர்பில் சுயாதீனமாக செயல்படும் நிபுனர்களாக இருப்பதுடன் அரச தரப்பின் பிரதிநிதிகளாக செயல்படுபவர்கள் அல்லர். இந்த உப குழு அரச தரப்பினரை சந்திப்பதற்கான விஜயத்தை மேற்கொள்ள அதற்கான ஆணையை கொண்டுள்ளது. இந்த கடமையின் நிமித்தம் இக்குழு சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையில் உள்ள நபர்கள் இருக்கும் எந்த ஒர் இடத்திற்கும் விஜயத்தை மேற்கொள்ளும்.

ஒப்பந்த தரப்புகளுக்கான முறைமைகள் மற்றும் சித்திரவதை தடுப்பதற்கான உபகுழு எனும் எங்களுடைய காணொலிகளில், மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

சமூக வலைதளங்களின் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலகத்தை நோக்கவும். மேலும் எங்களை டுவிட்டரில் @UNHumanrights, இலும், முகநூலில் @unitednationshumanrights இலும், மற்றும் இன்ஸ்றகிரேமில் @unitednationshumanrights இலும் நோக்கலாம்.